1st April 1963]

**திரு. பி. முருகையன் :** மாவட்ட வளர்ச்சி மன்றம் மூலமாக டைரக்டர் ஆஃப் மெடிக்கல் சர்விஸுக்கு ஒரு தீர்மானம் அனுப்பி அது இப்போது அழுத்தி வைக்கப்பட்டிருக்கிறது என்று ஒரு தகவல் கிடைத்துள்ளது. அது அமைச்சருக்குத் தெரியுமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** பஞ்சாயத்து போர்டு, கரம்பக்குடியிலிருந்து ஒரு ரெப்ரெஸென்டேஷன் வந்தது. அவர்களே எடுத்து நடத்தி, கட்டடத்தைக் கட்டி, அதற்கு 48,000 ரூபாய் ஆகுமென்றும், அதற்கு மேல் மெயின்டினென்ஸ் எக்ஸ்பென்ஸை அரசாங்கம் எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும் கேட்டிருந்தார்கள். அதைப்பற்றி டி.எம்.எஸ். எழுதிக் கேட்டிருக்கிறார். இப்போது அதைப் பற்றிய தகவல் ஏதும் பஞ்சாயத்து போர்டிலிருந்து வரவில்லை.

**குடிதண்ணீர் திட்டம் (திண்டிவனம்)**

***452 கேள்வி.—திரு. ஆ. தங்கவேலு :** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

கோடைக்கால பற்றுக்குறையை தவிர்ப்பதற்காக திண்டிவனம் நகர குடிதண்ணீர் திட்டத்துடன் ரெட்டணையிலுள்ள ரெட்டியார் கிணற்றை இணைக்கும் நடவடிக்கை எந்த நிலையில் இருக்கிறது?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** ரெட்டியார் கிணற்றிலும், மற்ற கிணறுகளிலும் வரும் கோடைக் காலத்தில் நீர்வளம் சம்பந்தமாகச் சோதனைகள் நடத்தும்படி சுகாதார இன்ஜினீயரைக் கேட்டிருக்கிறார்கள்.

**திரு. ஆ. தங்கவேலு :** இந்தத் திட்டம் எடுத்துக்கொள்வதற்குக் காலதாமதம் ஆவதற்கு என்ன காரணம் என அறிய விரும்புகிறேன்.

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** அதிலே இப்போது இன்வெஸ்டிகேஷன் செய்வதற்காக வேண்டி ஒரு குழு அமைத்திருக்கிறார்கள். இன்வெஸ்ட்டிகேஷன் ரிப்போர்ட் வந்த பிறகுதான் இதைக் கால தாமதம் இல்லாமல் எடுத்துக் கொள்ள முடியும் என்று கூறிக்கொள்கிறேன்.

**வானூர் பஞ்சாயத்து யூனியன் மருத்துவ மனை**

***454 கேள்வி.—திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வானூர் பஞ்சாயத்து யூனியன் மருத்துவமனையில் டாக்டர் இல்லாமல் சுமார் ஓராண்டு காலமாக அந்த வட்டாரத்து மக்கள் சிகிச்சைக்கு அவதிப்படுவது உண்மையா?

[1st April 1963

(இ) அங்கு டாக்டர் குடியிருப்பு இல்லமும், மருத்துவ மனையும் பழுதுபட்டு கிடப்பது உண்மையா ?

(உ) ஆம் எனில், என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ளப் பட்டது ?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : (a), (b) & (c) : Government understand that the post of Medical Officer of the dispensary is vacant since 2nd March 1962. It is for the Panchayat Union Council to take necessary action in the matter.

### மருத்துவ மனைகளில் பொது நூல்நிலையம்

*466 கேள்வி.—புலவர் கா. கோவிந்தன் : கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மதுரை எர்ஸ்கின் மருத்துவ நிலையத்தில் ஏற்படுத்தியிருப்பது போல சென்னையிலும் மாவட்டத் தலைநகர்களிலும் உள்ள எல்லா மருத்துவ நிலையங்களிலும் பொது நூல்நிலையம் நிறுவப்படுமா ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** அந்தந்த ஸ்தல நூலக அதிகார சபைகள் ஜில்லாத் தலைமை ஆஸ்பத்திரிகளிலும் சென்னை நகர அரசாங்க ஆஸ்பத்திரிகளிலும் நூலகங்கள் ஏற்படுத்துவதைக் குறித்து கனம் அங்கத்தினர் குறிப்பிடுகிறார் என்று நினைக்கிறேன். அதுவாயிருந்தால், செங்கற்பட்டு ஜில்லாத் தலைமை ஆஸ்பத்திரியில் நூலகம் ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. உதகை தலைமை ஆஸ்பத்திரியில் நூலகம் ஒன்றை ஏற்படுத்த விரைவில் அனுமதி வழங்கப்படும். மருத்துவத் துறை டைரக்டர் இது விஷயமாய் திட்டங்கள் அனுப்பும்போது ஜில்லாத் தலைமை ஆஸ்பத்திரிகளிலும் சென்னை நகரிலுள்ள அரசாங்க ஆஸ்பத்திரிகளிலும் நூலகங்கள் ஏற்படுத்த இதைப்போலவே அனுமதி வழங்கப்படும்.

It is presumed that the Honourable Member refers to the opening of libraries in District Headquarters and City State Hospitals by the Local Library Authorities concerned. If so, a library has been established in the District Headquarters Hospital at Chingleput. Permission for the opening of a library in the Headquarters Hospital, Ootacamund, will be accorded shortly. Similar permission will be granted in respect of other District Headquarters and City State Hospitals as and when proposals in that regard are received from the Director of Medical Services.

**புலவர் கா. கோவிந்தன் :** தலைவர் அவர்களே, நூலைப் படிப்பது ஆளுக்கு நோயை மறந்திருக்கிற நிலையை உண்டாக்கும். நூல் நிலையங்களை ஆங்காங்கு ஏற்படுத்துவதோடு, எழுந்து போக முடியாத நிலையில் நூலகத்திற்குச் சென்று வேண்டிய நூல்களை எடுத்துவரமுடியாத நிலையில் இருக்கக்கூடிய நோயாளிகளுக்கு நூலகங்கள் அவர்கள் படுக்கைக்குச் சென்று கொடுக்கும் முறையில் வழி வகுப்பார்களா ?